பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

முன்னுரை 25

முதல் விதி: இஸ்திகாமத் - அல்லாஹ்வின் அருட்கொடை; அந்த இரட்சகனின் அன்பளிப்பு 29

இரண்டாம் விதி: உறுதியான, நடுநிலையான பாதையில் நிலைத்திருப்பதே இஸ்திகாமத்தின் உண்மைநிலை 35

மூன்றாம் விதி: இதயம் நிலைத்திருப்பதுதான் அசல் இஸ்திகாமத் 38

நான்காம் விதி: உண்மையாக அல்லது அதற்கு நெருக்கமாக இருப்பதைத்தான் இஸ்திகாமத் நம்மிடம் எதிர்பார்க்கின்றது 41

ஐந்தாம் விதி: எண்ணங்கள், சொற்கள், செயல்கள் இவற்றோடு தொடர்புடையதுதான் இஸ்திகாமத் 45

ஆறாம் விதி: அல்லாஹ்வுக்காகவே தவிர இஸ்திகாமத் இல்லை 48

ஏழாம் விதி: நற்செயலை மட்டும் நம்புவது இஸ்திகாமத் அல்ல 50

எட்டாம் விதி: மறுமையிலுள்ள பாலத்தில் நிலையாக நிலைத்திருப்பதே உலகிலுள்ள இஸ்திகாமத்தின் பலன் 52

ஒன்பதாம் விதி: தீய ஆசைகளும் கெட்ட சந்தேகங்களும்தான் இஸ்திகாமத்தின் தடைகள் 54

பத்தாம் விதி: இறைநிராகரிப்பாளர்களுக்கு ஒப்பாக இருப்பதுதான் இஸ்திகாமத்தை விட்டும் விலகுவதாகும் 59

நிறைவுரை 61

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

❀

பெயரும் பிறப்பும்

ஷெய்க் அப்துற் றஸ்ஸாக் இப்னு அப்துல் முஹ்சின் அல்அப்பாது அல்பத்ர் அவர்களின் இயற்பெயர், அப்துற் றஸ்ஸாக். தந்தை பெயர் அப்துல் முஹ்சின். அல்அப்பாது என்பது இவர்களின் முப்பாட்டனார் அப்துல்லாஹ் இப்னு ஹம்து அவர்களுக்கு வழங்கப் பட்டுவந்த அடைமொழியாகும். அல்பத்ர் என்பது குடும்பப் பெயராகும். இக்குடும்பம் அல்அனாஸியா குலங்களில் ஒன்றான உத்ரா குலத்தைச் சேர்ந்ததாகும். சுலைமான் இப்னு அப்துல்லாஹ் ஆலு பத்ர் அவர்களின் மகள்தான் ஷெய்க்கின் பாட்டி.

ஹிஜ்ரீ 1382 துல் கஅதா பிறை 22 (கி.பி. 1963 ஏப்ரல் 16) அன்று சஊதி அறேபியாவின் ரியாழ் நகருக்கு வடக்கே முந்நூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஸுல்ஃபீ எனும் கிராமத்தில் ஷெய்க் பிறந்தார்கள். தனது தந்தையின் சீரான வளர்ப்பில் அங்குள்ள கல்விக்கூடம் ஒன்றில் அடிப்படைக் கல்விகளைக் கற்றார்கள். ஷெய்க்கின் தந்தை அப்துல் முஹ்சின் அவர்கள் ஹதீஸ் துறை மேதைகளில் ஒருவர். அறபுலக அறிஞர்கள் அனைவராலும் பெரி தும் மதிக்கப்படும் மூத்த கல்வியாளர். தொடர்ந்து மதீனாவில் மஸ்ஜிதுந் நபவீயின் கல்வி அமர்வுகளில் பாடங்கள் நடத்திவருபவர்.

கல்வித்தகுதி

ஷெய்க் அவர்கள் அகீதா எனும் கொள்கைகளைப்பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். அத்துடன், பின்வரும் மூத்த அறிஞர்களிடமும் கல்வி கற்றுள்ளார்கள்.

- அல்அல்லாமா ஷெய்க் அப்துல் முஹ்சின் அல்அப்பாது
- அல்அல்லாமா ஷெய்க் அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் ﵀
- அல்அல்லாமா ஷெய்க் முஹம்மது ஸாலிஹ் உஸைமீன் ﵀
- அல்அல்லாமா ஷெய்க் முஹம்மது நாசிருத்தீன் அல்பானீ ﵀

- ஷெய்க் அலீ நாசிர் ஃபகீஹீ
- ஷெய்க் அப்துல்லாஹ் அல்குனைமான்

கல்விப்பணிகள்

ஷெய்க் அவர்கள் தற்சமயம் மதீனாவிலுள்ள அல்ஜாமிஆ அல் இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்துவருகிறார்கள். அத்துடன், பல்வேறு தொகுப்புகளையும் விரிவுரைகளையும் எழுதியுள்ளார்கள். அவற்றில் சில:

1. ஃபிக்ஹுல் அத்இயத்தி வல் அத்காா் (فقه الأدعية والأذكار) – துஆக்கள் மற்றும் திக்ர்கள் பற்றிய விளக்கம்

2. அல்ஹஜ்ஜு வ தஹ்தீபுன் நஃப்ஸ் (الحج وتهذيب النفوس) – ஹஜ்ஜும் மனதை பக்குவப்படுத்துதலும்

3. தத்கிரத்துல் முஅதசீ (تذكرة المؤتي شرح عقيدة عبد الغني المقدسي) – அல்லாஹ்வைப் பற்றிய கொள்கை விளக்க நூல்

4. ஷரஹ் ஹாஷியத்து அபீ தாவூத் (شرح حاشية أبي داود) – அபூதாவூது என்ற நபிமொழித் தொகுப்பின் விரிவுரை

5. திராசத்து லி அஸரி மாலிக் ஃபில் இஸ்திவாயீ (دراسة لأثر مالك في الاستواء) – அல்லாஹ் உயர்ந்துவிட்டான் என்பது பற்றிய விளக்கநூல்

ஒலி வடிவ பதிப்புகள்

1. ஷரஹ் அல் கவாயிதுல் முஸ்லா (شرح القواعد المثلى) – இமாம் முஹம்மது ஸாலிஹ் அல்உஸைமீன் ﵀ எழுதிய அல்லாஹ்வைப் பற்றிய கொள்கையின் விதிகள் ஒரு விளக்கம்

2. ஷரஹ் அல்கலிமுத் தய்யிப் (شرح الكلم الطيب) – இமாம் இப்னு தைமிய்யா ﵀ தொகுத்தளித்த பரிசுத்தப் பிரார்த்தனைகள் ஒரு விளக்கம்

3. ஷரஹ் கவாயிது அல்அஸ்மா உல் ஹுஸ்னா (شرح قواعد الأسماء الحسنى لابن القيم) – அல்லாஹ்வின் அழகிய பெயர்களுக்கான அடிப்படைச் சட்ட விளக்கங்கள்

4. ஷரஹ் ஹாஷியத்து அபீதாவூத் (شرح الحاشية لأبن أبي داود) – அபூதாவூது என்ற நபிமொழித் தொகுப்பின் விரிவுரை

5. ஷரஹ் அகீதத்து அப்துல் கனீ அல் மக்தஸீ (شرح عقيدة عبد الغني المقدسي) – இமாம் அப்துல் கனீ அல்மக்தஸீ ﷺ அவர்களின் கொள்கை விளக்கம்

6. ஷரஹ் அல்வாசித்தியய்யா (شرح الواسطية لابن تيمية في مسجد الجامع) – இப்னு தைமிய்யா ﷺ அவர்கள் வாசித்தியய்யா மக்களுக்கு எழுதிய கொள்கை விளக்கம்

7. ஷரஹ் அகீதத்துத் தஹாவியய்யா (شرح العقيدة الطحاوية) – இமாம் தஹாவீ ﷺ அவர்களின் கொள்கை விளக்கம்

வலைதள மின்னூல்கள்

1. ஷரஹ் காமில் அலா கிதாபில் அதபில் முஃப்ரத் லி இமாமில் புகாரீ (شرح كامل على كتاب الأدب المفرد للإمام البخاري)

2. ஷரஹ் கிதாபுல் ஃபுஸூல் ஃபீ சீரத்திர் ரசூல் லி இப்னில் கஸீர் (شرح كتاب الفصول في سيرة الرسول لابن كثير)

மற்றும் பல. ஷெய்க் அவர்களின் கல்வியால் பயனடைய பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும்: http://www.al-badr.net/web/intex.php

முதல் விதி

இஸ்திகாமத் – அல்லாஹ்வின் அருட்கொடை; அந்த இரட்சகனின் அன்பளிப்பு

❀

அல்லாஹ்வின் திருவேதத்திலுள்ள பல்வேறு வசனங்களில் அல்லாஹ் 'ஹிதாயத்' எனும் நேர்வழியைத் தன்னுடன் இணைத்துக் கூறியுள்ளான். அனைத்துக் காரியங்களும் அவனது கைவசத்தில்தான் உள்ளன. அவனே நாடியவர்களுக்குத் தன் நேர்வழியைக் காட்டுகிறான். தான் நாடியவர்களை வழிதவறச் செய்கிறான். அடியார்களின் இதயங்கள் அனைத்தும் அவனது கட்டுப்பாட்டில்தான் உள்ளன. அவன் நாடியவர்களை நேர்வழியில் நிலைநிறுத்துகிறான். அவன் நாடியவர்களை வழி பிறழ வைக்கிறான். அல்லாஹ் கூறுகிறான்:

وَلَوْ أَنَّهُمْ فَعَلُوا مَا يُوعَظُونَ بِهِ لَكَانَ خَيْرًا لَهُمْ وَأَشَدَّ تَثْبِيتًا وَإِذًا لَآتَيْنَاهُمْ مِنْ لَدُنَّا أَجْرًا عَظِيمًا وَلَهَدَيْنَاهُمْ صِرَاطًا مُسْتَقِيمًا

அனைவரும் தங்களுக்கு அறிவுறுத்தியபடிச் செய்திருப்பார்களேயானால் அது அவர்களுக்கே மிக்க நன்றாய் இருந்திருக்கும். மேலும், (அது அவர்களை அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையில்) மிக உறுதிப்படுத்தியும் இருக்கும். மேலும், அச்சமயம் அவர்களுக்கு நம்மிடமிருந்து மகத்தான ஒரு கூலியையும் நிச்சயமாக நாம் கொடுத்திருப்போம். அவர்களை நேரான வழியிலும் நாம் செலுத்தியே இருப்போம். (குர்ஆன் 4:66,67,68)

நேர்வழியைப் பெறுவது என்பது அவன் கைவசத்தில்தான் இருக்கிறது. அல்லாஹ் கூறுகிறான்:

فَأَمَّا الَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَاعْتَصَمُوا بِهِ فَسَيُدْخِلُهُمْ فِي رَحْمَةٍ مِنْهُ وَفَضْلٍ وَيَهْدِيهِمْ إِلَيْهِ صِرَاطًا مُسْتَقِيمًا

எவர்கள் அல்லாஹ்வை உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, அவ(ன் வழங்கிய இஸ்லாமிய மார்க்கத்தி)னைப் பலமாகப் பற்றிப்

பிடித்துக்கொள்கின்றார்களோ அவர்களை அவன் தன்னுடைய அன்பிலும் அருளிலும் செலுத்திவிடுகின்றான். மேலும், தன் பக்கம் (வருவதற்குரிய) நேரான வழியில் அவர்களைச் செலுத்துகின்றான். (குர்ஆன் 4:175)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

وَاللَّهُ يَدْعُو إِلَى دَارِ السَّلَامِ وَيَهْدِي مَنْ يَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

(மனிதர்களே!) ஈடேற்றம் அளிக்கக்கூடிய (சுவர்க்க) வீட்டிற்கே அல்லாஹ் (உங்களை) அழைக்கிறான். (அவன் ஒருவனையே வணங்கிக் கீழ்ப்படிந்து நடக்கின்ற) அவன் நாடுகின்றவர்களை அதற்குரிய நேரான வழியிலும் செலுத்துகிறான். (குர்ஆன் 10:25)

وَالَّذِينَ كَذَّبُوا بِآيَاتِنَا صُمٌّ وَبُكْمٌ فِي الظُّلُمَاتِ مَنْ يَشَإِ اللَّهُ يُضْلِلْهُ وَمَنْ يَشَأْ يَجْعَلْهُ عَلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

எவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றார்களோ அவர்கள் இருள்களில் (தட்டழிகின்ற) செவிடர்களாகவும், ஊமையர்களாகவும் இருக்கின்றார்கள். அல்லாஹ், தான் நாடியவர்களைத் தவறான வழியில் செல்ல விட்டுவிடுகின்றான்; அவன் நாடியவர்களை நேரான வழியில் செலுத்துகிறான். (குர்ஆன் 6:39)

وَاللَّهُ يَهْدِي مَنْ يَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

அல்லாஹ் தான் நாடிய (நல்ல)வர்களையே (இதன் மூலம்) நேரான வழியில் செலுத்துகிறான். (குர்ஆன் 24:46)

إِنْ هُوَ إِلَّا ذِكْرٌ لِلْعَالَمِينَ لِمَنْ شَاءَ مِنْكُمْ أَنْ يَسْتَقِيمَ وَمَا تَشَاءُونَ إِلَّا أَنْ يَشَاءَ اللَّهُ رَبُّ الْعَالَمِينَ

இது உலகத்தார் அனைவருக்கும் ஒரு நல்ல அறிவுரையே தவிர வேறில்லை. ஆகவே, உங்களில் எவர் நேரான பாதையில் செல்ல விரும்புகின்றாரோ (அவர் இதனைக்கொண்டு நல்லுணர்ச்சி பெறுவார்.) எனினும், உலகத்தாரின் இறைவனாகிய அல்லாஹ் நாடினால் தவிர, நீங்கள் (நல்லுணர்ச்சி பெற) விரும்பமாட்டீர்கள். (குர்ஆன் 81:27-29)

இதே அர்த்தத்தைத் தரும் இறைவசனங்கள் நிறையவே உண்டு. எனவே, நேர்வழி என்பது அவன் கையில்தான் உள்ளது. தன் அடியார்களில் அவன் யாரை நாடுகிறானோ அவர்களுக்கு மட்டுமே அவன் உதவியருள்கிறான்.

ஆறாம் விதி

அல்லாஹ்வுக்காகவே தவிர இஸ்திகாமத் இல்லை

❀

1. அல்லாஹ்வுக்காக. அதாவது ஓர் அடியான் எந்தவொரு காரியத்தில் நிலைத்து நின்றாலும் அது அல்லாஹ்வின் திருப்தியையும், நன்மையையும் நாடி, முழுமையான மனத்தூய்மையுடன் அல்லாஹ்வுக்காக என்று மட்டும் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ

அல்லாஹ்வுக்கே மார்க்கத்தைத் தூய்மைப்படுத்தியவர்களாகவும் இஸ்லாமிய மார்க்கத்தில் உறுதிமிக்கவர்களாகவும் இருக்கின்ற நிலையில் அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும் என்பதைத் தவிர வேறு கட்டளை அவர்களுக்கு இடப்படவில்லை. *(குர்ஆன் 98:5)*

2. அல்லாஹ்வின் மூலமாக. அதாவது ஓர் அடியான் நிலைத்திருப்பது என்பது அல்லாஹ்வின் மூலமாகத்தான் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

فَاعْبُدْهُ وَتَوَكَّلْ عَلَيْهِ

அவன் ஒருவனையே நீர் வணங்குவீராக! அவன் மீதே பொறுப்புச் சாட்டுவீராக! *(குர்ஆன் 11:123)*

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

(கருணைமிக்க அல்லாஹ்வே!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம். *(குர்ஆன் 1:5)*

احْرِصْ عَلَى مَا يَنْفَعُكَ وَاسْتَعِنْ بِاللَّهِ

உனக்குப் பயன்தருபவற்றை ஆசைப்படு. அல்லாஹ்விடமே உதவியும் தேடு. *(முஸ்லிம் 2664)*

அபூ ஹுறைறா ﷺ அறிவிக்கும் இந்த நபிமொழியும் இங்கு கவனிக்கத்தக்கது.

3. அல்லாஹ்வின் கட்டளைப்படி. அதாவது, ஒருவன் அல்லாஹ்வின் கட்டளையிட்டபடி நேரான பாதையில் சரியான முறையில் நடப்பதில் நிலைத்திருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

فَاسْتَقِمْ كَمَا أُمِرْتَ

(நபியே!) உமக்குக் கட்டளையிடப்பட்டது போன்றே, நீரும் உம்முடன் இருக்கின்ற இணைவைத்து வணங்குவதிலிருந்து விலகியவரும் (நேரான வழியில்) உறுதியாக இருங்கள். (11:112)

ثُمَّ اسْتَقَامُوا

பின் நீங்கள் நிலைத்திருங்கள் (குர்ஆன் 46:13)

என்ற வசனத்திற்கு 'ஃபர்ளு எனும் கட்டாயக் கடமைகளை நிறைவேற்றுவதில் நிலைத்திருங்கள்' என்று இப்னு அப்பாஸ் ﷺ கூறியுள்ள விளக்கங்களை ஏற்கனவே நாம் கூறியுள்ளோம். 'அல்லாஹ்வுடைய கட்டளையின்மீது நிலைத்திருங்கள். நன்மையான விசயங்களில் அவனுக்குக் கட்டுப்படுங்கள்; தீமையான விசயங்களில் விலகியிருங்கள்' என்று இந்த வசனத்திற்கு ஹசன் ﷺ அவர்கள் விளக்கம் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வுடைய கட்டளை என்பது அவனுடைய ஷரீஅத்தாகும். அதை நிலைநிறுத்துவதற்காகத்தான் தன்னுடைய தூதர்களை அனுப்பிவைத்தான்.

பத்தாம் விதி

இறைநிராகரிப்பாளர்களுக்கு ஒப்பாக இருப்பதுதான் இஸ்திகாமத்தை விட்டும் விலகுவதாகும்

❀

இறைநிராகரிப்பாளர்களுக்கு ஒப்பாக இருப்பது என்பது இரண்டு வகையான குழப்பங்களை ஏற்படுத்தும். ஒன்று, கல்வியில் குழப்பம். மற்றொன்று, நற்செயலில் குழப்பம். இந்த இறைவசனத்தைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக! அவ்வழி எவர்களுக்கு நீ அருள்புரிந்தாயோ அவர்கள் (சென்ற) வழி. உன் கோபத்திற்குள்ளானவர்களோ வழிதவறியவர்களோ சென்ற வழியல்ல. (குர்ஆன் 1:6,7)

யூதர்களின் குழப்பம் நற்செயல்களிலும், கிறித்துவர்களின் குழப்பம் கல்வியிலும் வெளிப்பட்டன. அதாவது, யூதர்கள் கல்வி கற்றார்கள். ஆனால், நற்செயல் செய்யவில்லை. கிறித்துவர்களோ கல்வியில்லாமல் நற்செயல் செய்ய நினைத்தார்கள். எனவே, ஒருவன் செயல்படாமல் கல்வி கற்பது யூதர்களுக்கும், கல்வி இல்லாமல் செயல்படுவது கிறித்துவர்களுக்கும் ஒப்பாக இருப்பதுதான் அனைத்து சீரழிவுகளுக்கும் காரணம் என்பதையே இந்தப் பாடம் உணர்த்துகின்றது.

இப்னு தைமிய்யா ﷺ அவர்கள் தனது நூலொன்றுக்கு 'நரக வாசிகளுக்கு மாறுசெய்வதின் மூலம் நேர்வழியைத் தேடுதல்' என்று பெயரிட்டுள்ளார்கள். அதில், வழிகெட்ட அல்லது கோபத்திற்கு ஆளானவர்களின் வழிகளை விட்டும் தவிர்ந்து நேரான பாதைக்கு ஒரு முஸ்லிம் வரவேண்டும் என்பதற்காக அந்த வேதக்காரர்கள் செய்த சில செயல்களால் இந்தச் சமூகம் அடைந்த சோதனைகள்

என்னென்ன என்பதைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

وَدَّ كَثِيرٌ مِنْ أَهْلِ الْكِتَابِ لَوْ يَرُدُّونَكُمْ مِنْ بَعْدِ إِيمَانِكُمْ كُفَّارًا حَسَدًا مِنْ عِنْدِ أَنْفُسِهِمْ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُمُ الْحَقُّ

வேதமுடையவர்க(ளான யூதர்கள், கிறித்துவர்க)ளில் பெரும் பாலானவர்கள் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களான உங்களை நிராகரிப்பாளர்களாக மாற்றிவிட வேண்டுமே என்று ஆசைப்படுகிறார்கள். அவர்களுக்கு உண்மை (இன்னதெனத்) தெளிவாகத் தெரிந்த பின்பும் இவ்வாறு அவர்கள் விரும்புவதன் காரணமெல்லாம் அவர்களுக்கு (உங்கள் மீது)ள்ள பொறாமை தான். (குர்ஆன் 2:109)

கல்வி, நேர்வழி போன்றவற்றில் இறைவிசுவாசிகள்மீது பொறாமைப்பட்டதின் காரணமாக யூதர்களை அல்லாஹ் இழிவுபடுத்தியுள்ளான். பயனுள்ள கல்வி, நல்லமல் மூலமாக யாருக்கு அல்லாஹ் நேர்வழிகாட்டினானோ அப்படிப்பட்டவர்களைக் கண்டு சில கல்வியாளர்கள் பொறாமைப்படுவதும் உண்டு. இது பொதுவாகவே தீயகுணம்தான். இதைத்தான் இந்த இடத்தில் கோபத்திற்குரியவர்களின் குணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[24]

இப்னு தைமிய்யா ﵀ அவர்கள் யூத, கிறித்துவர்களின் பல்வேறு செயல்பாடுகளைப் பல்வேறு உதாரணங்களுடன் பலமுறை கூறியுள்ளார்கள். முஸ்லிம்களில் பலர் அவர்களுக்கு ஒப்பாக, அவர்களைப் போலவே நடப்பதும் உண்டு. இது பற்றித்தான் நபி ﷺ அவர்கள் இப்படி எச்சரித்திருக்கிறார்கள்:

لَتَتْبَعُنَّ سَنَنَ مَنْ كَانَ قَبْلَكُمْ شِبْرًا شِبْرًا وذِرَاعًا بِذِرَاعٍ حَتَّى لَوْ دَخَلُوا جُحْرَ ضَبٍّ تَبِعْتُمُوهُمْ

நிச்சயமாக நீங்கள் உங்களுக்கு முன்னுள்ளவர்களின் வழியைச் சாணுக்கு சாண், முழத்துக்கு முழம் பின்பற்றுவீர்கள். அவர்களில் யாராவது உடும்பின் பொந்துக்குள் நுழைந்திருந்தால் அவர்களையும் நீங்கள் விடாது பின்தொடர்வீர்கள். (அறிவிப்பு: அபூ ஸயீத் அல்குத்ரீ ﵁, புகாரீ 7320)

24 இக்திளாவு ஸிராத்துல் முஸ்தகீம் 1/83